Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 24/2023**

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | பழ வியாபாரம் |
| பெயர் | - | சபரிகார்த்திக் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | வெள்ளியங்கிரி | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | எம்.ஜி.ஆர்.நகர் | வயது | - | 34 |
| சாதி | - | - | | | |

**17.10.2023**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை** :

1. நான் வால்பாறை பழைய பஸ்ஸ்டாண்டில் பழ வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 05-02-2023 அன்று இரவு 7.00 மணியளவில் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள எனது வீட்டிற்கு முன்பாக நான் நடந்து வந்துகொண்டிருக்கும் போது எனது மனைவி நந்தினி மற்றும் திவ்யா, பிரவீனா ஆகியோர் எனது வீட்டிற்கு முன்பு நின்று அவர்களுக்குள் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

2. அப்போது ஆஜர்எதிரி வின்சென்ட் என்பவர் அங்கு வந்து என்னடீ தேவிடியா முண்டைகளா பேசியிட்டு இருக்கீங்க என்று ஆபாசமாக பேசினார். நான் ஏன்டா பெண்கள்கிட்ட இப்படி அசிங்கமாக பேசுற என்று கேட்டேன். அதற்கு நீ என்னடா தாயோலி மகனே கேக்கிறது என்று ஆஜர் எதிரி வின்சென்ட் சொன்னார்.

3. மேலும் நான் எப்போதும் குடிக்கிறதற்கு பணம் கேட்டா தரனும் இல்லனா எவனும் நிம்மதியாக இருக்கமுடியாது என்று ஆஜர் எதிரி சொன்னார். எங்க குழந்தைகளை கழுத்தை நெறித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். பின்னர் அங்கு கிடந்த கல்லை எடுத்துக்கொண்டு அடிக்கஓடிவந்தார்.

4. அதற்கு பயந்துகொண்டு நானும் எனது மனைவி நந்தினி, திவ்யா, பிரவீனா ஆகியோர் வீட்டுக்குள் ஓடிவிட்டோம். அதன்பிறகு பக்கத்து வீட்டுக்காரரான மணிக்குமார், மதனகுமார்

வருவதை பார்த்த ஆஜர் எதிரி கல்லை போட்டுவிட்டு ஓடிவிட்டார். அப்போது இரவு நேரம் என்பதால் போலீஸ் ஸ்டேசன் போகவில்லை. பின்னர் 6-ம் தேதி வால்பாறை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். என்னை அடிக்க எடுத்துவந்த கல்லை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னால் அடையாளம் காட்டப்படும் கல்தான் அது. அந்த கைக்கு அடக்கமான கருங்கல் சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**:

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை